

# இது
# உங்களுக்காக

உங்கள் நலனில் அக்கறைகொண்ட
ஒருங்கிணைந்த, வளர்ச்சியை நோக்கிய தசாப்தம்

නාමල් රාජපක්ෂ
நாமல் ராஜபக்ச
**Namal Rajapaksa**

X

# எமது வெற்றியின் பின்புலத்தில்....

ஒரு நாட்டின் ஆட்சி என்பது அந்த நாட்டு மக்களுடைய அபிலாஷைகளை மதித்து, அவற்றுக்கு செவிசாய்த்து நாட்டின் இறைமையைப் பாதுகாத்து, அந்த நாட்டுக்கும் மக்களுக்கும் தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதேயாகும். மனிதாபிமான நடவடிக்கைகளுக்குப் பின் முழு தேசத்தையும் இணைத்துக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான அபிவிருத்தி மூலம் நாட்டை ஒரே குடைக்குள் கீழ் கொண்டுவர முடிந்தது. அதன் மூலம், உலகிலேயே மிகவும் வேகமாக அபிவிருத்தி அடைந்த நாடாக இலங்கையைக் கொண்டுவர முடிந்தது, மஹிந்த சிந்தனையில் உதித்த சிறந்த கொள்கைகளின் விளைவாகவே என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துகளுக்கும் இடமில்லை.

அவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுத்து, அவற்றை வெற்றிகரமாய் நிறைவேற்றுவதே எமது தலையாய இலட்சியம். கடந்த தசாப்தத்தில் எமது பிராந்தியத்தில் மாத்திரமல்லாமல், உலகளாவிய ரீதியிலும் பல்வேறுபட்ட மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. ஆகவே, அவ்வாறான நல்ல மாற்றங்களுடன் கைகோர்த்து, நன்மைக்கான உலகத்தின் பயணத்தோடு இணைந்து கொள்வதே சிறந்தது. அந்த மாற்றங்களுக்கேற்றவாறு, எமது திட்டங்கள் மற்றும் வியூகங்களை நவீன சிந்தனைகளோடு முன்னெடுத்துச் செல்ல நாம் உறுதிபூண்டுள்ளோம்.

யுத்தம் காரணமாக சிதைந்து, சிதறுண்டு போயிருந்த எம் தாயகம், கௌரவ. மஹிந்த ராஜபக்ச அவர்களின் மனிதாபிமானம் மிக்க பெருமுயற்சியால் மீட்டெடுக்கப்பட்டு இன்றிணைந்த தேசமாக ஆக்கப்பட்டது போல, பொருளாதார சீர்குலைவினால் துவண்டு போயிருக்கும் எம் நாட்டை மீட்டெடுத்து, மீண்டும் அதற்கு புத்துயிரூட்டி, அபிவிருத்தியடைந்த தேசமாக மாற்றுவோம் என உங்கள் அனைவருக்கும் நாம் உறுதிகூறுகிறோம்.

இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும்போது, எம் நாட்டில் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாப்போம் என்றும், நாட்டின் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்போம் என்றும், புனிதத்துவம் வாய்ந்த புத்த சாசன விழுமியங்களையும் பாதுகாப்போம் என்றும், இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனது உரிமைகளையும், வாழ்வதற்கான சுதந்திரத்தையும் பாதுகாப்போம் என்றும் இத்தால் உறுதிகூறுகிறோம்.





# வயிற்றுப்பசிக்கும் வாழ்க்கைப்பசிக்கும் நிவாரணம்

## வரிச்சுமையிலிருந்து விடுபட ஒரு தீர்வுப்பொதி

தற்போது நடைமுறையில் உள்ள சிக்கலான, வெளிப்படைத்தன்மையற்ற வரி விதிப்பு முறைக்கு (RAMIS) பதிலாக, மக்களுக்கு சுமையாகவும், வரி செலுத்துவோரை குழப்பும் வகையிலும், வருமான வரி, பெறுமதிசேர் வரி தவிர அனைத்து வகையான வரிகளையும் ரத்து செய்து, எளிமையான வரிவிதிப்பு முறையை அறிமுகப்படுத்துவோம்.

பயனற்ற மற்றும் பயனற்றது என விமர்சிக்கப்படும் கடுமையான வரி முகாமைத்துவ முறையை புதுப்பிக்க அல்லது ஒழிக்க நாங்கள் பாடுபடுவோம்.

எதிர்பார்த்த இலக்குக்கும் மேலாக தற்போது விதிக்கப்படும் வருமான வரி உழைப்பு ஊதியத்தின் மீது விதிக்கப்படும் வரி (PAYE tax) போன்ற வரிகளைக் குறைத்து தேவைக்கேற்ற வகையில் மாத்திரமே வரிவிதிப்பை மேற்கொள்வோம்.

அத்தியாவசிய இணைய வசதிகள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகள் மீது மாற்றத்தினை ஏற்படுத்தப் பாடுபடுவோம்.

தற்போது நடைமுறையிலுள்ள வரி வருமானம் குறையாமல் இருக்கும் வகையில் சம்பந்தப்பட்ட முக்கிய அரச நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு வரிவிதிப்பு வலையமைப்பை விரிவுபடுத்துவோம்.



இது உங்களுக்காக


## மகிந்த சிந்தனை கோட்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்படும் உர விநியோகம்

எமது ஆட்சியில் நெல், மரக்கறி மற்றும் பழச்செய்கை மற்றும் தேயிலைத் தோட்டங்களுக்கு, மகிந்த சிந்தனை மானியத் திட்டத்தைப் போன்ற நிரந்தர உர மானியத் திட்டத்தை விவசாயிகளாகிய உங்கள் நலனைக் கருத்திற்கொண்டு நடைமுறைப்படுத்துவோம். அதேநேரம், அனைத்து வகையான உரங்களையும் எளிதாகக் கொள்வனவு செய்வதற்கு ஏதுவாக சந்தை வசதிகளை ஏற்படுத்தித் தருவோம்.

## சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தல்

கடந்த சில ஆண்டுகளாக சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்கள் முடங்கியதற்கு முக்கிய காரணமாக இருந்த இறக்குமதி கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்த்துவோம். இது தொழில்முனைவோர் மீண்டும் உலக சந்தையுடன் இணைவதற்கும் அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளை விரைவாக செயல்படுத்துவதற்கும் உதவும்.

விரைவான விளைச்சல் தரும் பொருளாதாரப் பயிர்கள், அதிக பலன்களைத் தரக்கூடிய பொருட்கள் மற்றும் அவற்றின் உற்பத்தி மற்றும் அவற்றைச் சந்தைப்படுத்துதலுக்கான சந்தை ஒருங்கிணைப்பு ஆகியவற்றை நாங்கள் எளிதாக்குவோம்.



## இளையோர் சமுதாயத்தினர் கைநிறைய உழைத்து முன்னேற வாய்ப்புகள்

சுகாதாரம், கட்டுமானம், கல்வி மற்றும் பயிற்சி, மென்பொருள் பொறியியல் (Software Engineering) தரவு பகுப்பாய்வு (Data Analysis) இணைய பாதுகாப்பு (Cyber Security) இணைய வணிகம் (e-Commerce), தயாரிப்பு வடிவமைப்பு (Product Design), இணையவழி வடிவமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் முறைமை (Digital Content Marketing), விற்பனை வலையமைப்பு போன்ற துறைகளில் அடுத்த பத்தாண்டு காலத்தில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் முனைப்புடன் செயல்படுவோம்.

வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுச் செல்வோரின் அடிப்படைச் செலவுகளை ஈடுகட்ட குறைந்த வட்டியில் கிராம, சமுர்த்தி, கூட்டுறவு வங்கிகள் மூலம் தனிநபர் கடன் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துவோம்.

இந்த நாட்டில் இருந்தவாறே சர்வதேச சந்தையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் துறையில் தொழில் செய்யத் தேவையான அறிவையும் பயிற்சியையும் இளைஞர்களுக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்தையும் உள்ளடக்கிய வகையில் தகவல் தொழில்நுட்ப வலயங்களை உருவாக்குவோம்.



## தொடரும் சமுர்த்தி நிவாரணம்

சமுர்த்தி கொடுப்பனவுகள் மூலம் நிலையான வருமானம் இன்றி இருப்போருக்கும் குறைந்த நாளாந்த வருமானம் பெறும் மக்களுக்கும் மூன்று வேளை உணவு வழங்குவதற்கு போதிய மானியத் தொகையை தொடர்ந்து வழங்குவோம்.

## அத்தியாவசிய பயன்பாட்டுக்கான கட்டணங்களுக்கு நிவாரணம்

நீர் மற்றும் மின்சார பயன்பாட்டு சேவைகளுக்காக தற்போது மாதாந்தம் செலுத்தப்படும் அதிக கட்டணச் சுமைகளிலிருந்து உங்களுக்கு நிவாரணம் வழங்குவோம்.

## தேவையற்ற அலைச்சலுக்கு முற்றுப்புள்ளி

பிறப்பு, கல்வி,கடவுச்சீட்டு மற்றும் பிற சான்றிதழ்கள் போன்ற அரசாங்க சேவைகளைப் பெறுவதற்கும், அத்தாட்சிப்படுத்தலின் போதும் விரயமாகும் அதிகமான, தேவையற்ற நேரம் மற்றும் பண விரயத்திற்கும் தீர்வாக, அனைத்து பொது சேவைகளையும் ஒருங்கிணைக்கும் தகவல் தொழில்நுட்ப வலையமைப்பை நிறுவுவோம்.





## சுற்றுலா பரிமாற்ற மையம்

வெறும் சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் ஒரு நாடாக இல்லாமல், பிராந்தியத்தின் சுறுசுறுப்பு மிக்க சுற்றுலாப் பரிமாற்ற மையங்களில் (Travel, Trade, Transit Centre) ஒன்றாக நமது நாட்டை அபிவிருத்தி செய்வோம்.



## சுகாதார உற்பத்தி மற்றும் தேக ஆரோக்கிய மையம்


தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பில் (SAARC) உள்ள முக்கிய மருந்து மற்றும் பிற சுகாதாரப் பொருட்கள் உற்பத்தி மையங்களில் (Pharmaceuticals Manufacturing Centre) ஒன்றாக இலங்கையை மாற்றுவோம். அதே சமயம், உலகின் அதிநவீன தனியார் மருத்துவமனைகள் மற்றும் உடல்-உள ஆரோக்கியத்துக்கான (Health and Healing Centre) உள்ளூர் மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை அமைப்பை உருவாக்கி, இலங்கை நாட்டை உலகின் முன்னணி சுகாதார மற்றும் ஆரோக்கிய சேவைகளை வழங்கும் தேசமாக பரிணமிக்கச் செய்வோம்.

# இலங்கையை ஒரு புதிய உற்பத்தி மையமாக மாற்றும் நோக்கில்



## உலகளாவிய ஆன்மீக மையம்

தற்போது உலகில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் குழப்பம் நிறைந்த சூழ்நிலைகளுக்கு மூல காரணியை இருப்பது குலைந்துபோன மனநிலையே. உலகம் முழுவதும் வாழும் மக்கள் மத்தியில் புரையோடிப்போயுள்ள ஒரு பிரச்சினையாகும். எனவே, அவ்வாறு மனநிம்மதி இழந்தோர் மனநலம் பெறவும், நிம்மதியை அடையவும் உலகின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பல்வேறு வழிமுறைகளைத் தேடத் தொடங்கியுள்ளனர். எம் தேசமானது பல்வேறு தியான முறைகளை உள்ளடக்கிய தூய பௌத்த நெறிமுறைகளை அனுஷ்டிக்கும் பல்வேறு ஆசிய மத அடிப்படை அமைப்புகளின் தாயகமாகும். எனவே, நமது நாட்டை உலக ஆன்மீக மையமாக (Spiritual Centre) மாற்றுவதில் பெருமைகொள்வோம்.



## உயர் தொழில்நுட்ப திறன்கொண்ட உற்பத்தி நிலையம் ஒன்றை ஸ்தாபித்தல்

சர்வதேச சந்தை நிலவரங்களுக்கேற்ப வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு சம வாய்ப்புகளையும் வசதிகளையும் வழங்கும் அதிநவீன உயர் தொழில்நுட்ப உற்பத்தி மையமாக (High-precision Technology Products Manufacturing Centre) இலங்கையை மாற்றுவதற்கு தேவையான ஒழுங்குமுறைக் கொள்கை மற்றும் கட்டமைப்பு மாற்றங்களைச் செய்யும்பொருட்டு, உயர்மட்ட சர்வதேச பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றுவது.

## சக்திவலு ஏற்றுமதி மையம் (Energy Export Centre)

இலங்கையை எரிசக்தி ஏற்றுமதி மையமாக மாற்றும் வகையில், சூரிய ஒளியில் உள்ள பசுமை வலு மற்றும் ஐதரசன் போன்ற புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை ஏற்றுமதி செய்ய பரந்த அளவிலான முதலீடுகளை மேற்கொள்ளல்.



## கலை-கலாச்சார கேந்திர மையம்

எமது புராதன கலாச்சார கலைகளைப் போஷித்து அவற்றை நவீனத்துவத்துடன் சர்வதேச சந்தைக்கு எடுத்துச் செல்லக்கூடிய கலாச்சார மையமாக (Cultural Export Centre) இலங்கையை மாற்றுவோம்.




# இலங்கையை ஒரு புதிய உற்பத்தி மையமாக மாற்றும் நோக்கில்



## ஆக்கப்பூர்வமான பொருளாதார மையம்

சமூக ஊடகங்கள் மூலம் ஏராளமான பார்வையாளர்களை ஈர்க்கும் ஒளி-ஒலி படைப்புகளை உள்ளடக்கிய படைப்பாற்றல் தயாரிப்பு மையமாக (Creative Economic Centre) எம் நாட்டை முன்னே கொண்டு செல்வோம்.



## அழகான மற்றும் அமைதியான கற்கை நெறி மையம்

தற்போது உலகம் முழுவதும் பரவி வரும் போர்ச் சூழலில் இருந்து விடுபட்டு, அமைதியான சூழ்நிலையில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு வசதியாக, சர்வதேச கல்வி மையமாக (Education Centre) இலங்கையை மாற்றுவோம். அந்த நோக்கத்திற்காக, நாட்டின் மிகவும் இரம்மியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிகளைச் சுற்றி பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்மட்ட தொழில்நுட்ப நிலையங்களை உருவாக்கி, ஒவ்வொரு ஆண்டும் 10,000 வெளிநாட்டு மாணவர்கள் இங்கு வந்து தங்கள் கற்றல் நெறிகளைப் பூர்த்திசெய்யும் வகையில் எம் தாயகத்தை ஒரு சிறந்த உயர் கல்வி மையமாகப் பரிணமிக்கச் செய்வோம்.

# Namal Vision

## ஒருங்கிணைந்த வளர்ச்சி பற்றிய மாதிரி வடிவம்

### அரச முன்னுரிமை

- தேசத்தின் அத்தியாவசியத் தேவைகள்
- பொருளாதார வளர்ச்சி
- சமூக அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம்
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு

### புதிய நடைமுறைகளை அறிமுகம் செய்தல்

- அரச துறை
- விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி
- உற்பத்தித் துறைகள்
- சேவைகள் தொடர்பான துறை



### முதலீடுகள்

- தொழில்முனைவு
- மனித வளம்
- உற்பத்தி மேம்பாட்டுக்கான ஆராய்ச்சி
- உட்கட்டமைப்பு வசதிகள்

### சுதந்திரம்

- பொருளாதார சுதந்திரம்
- அரசியல் சுதந்திரம்
- கலாச்சாரத்தைப் பேணும் சுதந்திரம்
- மத வழிபாட்டுச் சுதந்திரம்

இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் உரிய முறையில் வெற்றியடையாததற்கு முக்கியக் காரணம் அவை ஏனைய துறைகளுடன் தொடர்புகளை மேற்கொள்ளாமை.

எங்கள் அபிவிருத்தி மாதிரியானது, சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளையும் பங்குதாரர்களுடன் தொடர்புபடுத்தக்கூடிய ஒரு நவீன செயல்முறையாகும். எனவே, இதை ஒரு ஒருங்கிணைந்த வளர்ச்சி என்று அடையாளப்படுத்த முடியும்.



## 1
## தேசத்தின் அத்தியாவசியத் தேவைகள்

சிங்கள, தமிழ், மலாய, பறங்கிய, ஆதிவாசி, வேடுவர் என ஒவ்வொரு குடிமகனும் சம இறையாண்மையுடன் வாழக்கூடிய உரிமையையும் ஒற்றுமையையும் பாதுகாப்போம்.

நாட்டின் உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு சேவைகளை நாங்கள் முழுமையாக மதிப்பாய்வு செய்து, தற்போது நிலவும் சகல குறைபாடுகளையும் உடனடியாக சீர்செய்து, அத்துடன் பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் அரசியலமைப்பு உரிமைகளை நிலைநிறுத்த அர்ப்பணிப்புடன் பாடுபடுவோம்.

இலங்கையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அதே வேளை, எந்தவொரு அரசாங்கத்துக்கோ அல்லது சக்திகளுக்கோ அடிபணியாது அனைத்து நாடுகளுடனும் இணக்கமாக செயற்பட்டு அவற்றுடன் சுமுகமான உறவுகளைப் பேணுவோம்.

பௌத்த மதத்தையும், அதன் கலாச்சார விழுமியங்களையும் பாதுகாக்க அயராது உழைப்போம்.

## 2
## பொருளாதார வளர்ச்சிக்கான நான்கு (4) படிகள்

2025-2035 ஆண்டுகளுக்கிடையேயான மொத்த தேசிய உற்பத்தியை 180 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாகவும் (2) உயர்த்துவோம்.

வர்த்தக நெகிழ்வுத்தன்மையை நேர்மறையான மதிப்புக்கு கொண்டு வருவதன் மூலம், 6 மாத இறக்குமதிக்கு போதுமான வலுவான அமெரிக்க டொலர் (US$) கையிருப்பைப் பேணுவோம்.

ஆண்டின் தொடக்கத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்துக்கு அப்பால் செல்லாமல் ஒதுக்கப்பட்ட நிதியை வெளிப்படைத்தன்மையுடன் நிர்வகிப்போம்.

அரச கடன் தொகையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80மூ ஆகக் குறைப்போம்.

சராசரி பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 7மூ மாக நிலைநிறுத்தி, பணவீக்கத்தை குறைந்த ஒற்றை இலக்கத்துக்குள் வைத்து பேணிக்காப்போம்.





## 3
## சமூக வளர்ச்சியில் உலகின் முதல் 50 இடங்களுக்குள் எம்மைத் தக்கவைத்துக் கொள்வோம்

ஐக்கிய நாடுகளின் மனித அபிவிருத்தி சுட்டெண்ணில் அடங்கியுள்ள 193 நாடுகளில் தற்போது 78 ஆவது இடத்தில் உள்ள இலங்கையை, அடுத்த தசாப்தத்தில் முதல் 50 நாடுகளுக்குள் கொண்டு வருவதற்கு அயராது பாடுபடுவோம்.

மக்களின் உடல்-உள ஆரோக்கியத்தை தொடர்ந்து விருத்தி செய்து இலங்கைவாழ் மக்களின் சராசரி ஆயுளை 2 ஆண்டுகளால் அதிகரிக்கச் செய்வோம்.

பாடசாலை அல்லது பாடசாலைக் கல்வியினை நிறைவு செய்ததன் பின்னர் எதிர்பார்த்திருக்கும் முறையான உயர் கல்வியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சராசரி காலத்தை 2 ஆண்டுகளாக அதிகரிப்போம்.

சுத்தமான மற்றும் சத்தான உணவு, வீடுகள், மனைகள், கண்ணியமான தொழில் மற்றும் கௌரவமான வாழ்க்கைத் தரத்திற்குத் தேவையான பொழுதுபோக்கு ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலம் தனிநபர் மொத்த தேசிய வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் (x2).

## 4
## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

மேற்குறிப்பிட்ட பொருளாதார மற்றும் சமூக இலக்குகளை அடையுமுகமாகவும், அவற்றை நீண்ட காலத்திற்கு தக்கவைக்கும் முகமாகவும் நமது இயற்கை வளங்களை சரியான முறையில் பயன்படுத்துவோம்.

பொருளாதார வளர்ச்சி காரணமாக ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை முடிந்தவரை குறைப்போம்.

சுற்றுச்சூழலின் ஒரு அங்கமான விலங்குகள் மற்றும் உயிரினங்களின் பாதுகாப்பை உறுதி செய்வோம்.

பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு தடையாக உள்ள சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் சான்றிதழ்களைப் பெறுவதில் நிலவும் காலவிரயத்தை சீர்செய்து விரைவாக அவற்றைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்வோம்.



නාමල් රාජපක්ෂ
நாமல் ராஜபக்ச
**Namal Rajapaksa**

**X**

# புதிய நடைமுறைகளை அறிமுகம் செய்தல்

## 1

## அரச சேவைகளை அனைவருக்கும் உகந்த சேவையாக மாற்றுதல்

அதி நவீன மற்றும் தரவுகளை அழிக்கவோ சிதைக்கவோ முடியாத சர்வதேச தரத்தினாலான கணனி பாதுகாப்பு மென்பொருளை நிறுவுவதன் மூலம், முழு அரசாங்க சேவையையும் ஒருங்கிணைந்த ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவருவோம்.

மின்னணு மற்றும் எண்ம வழி (Digital) மூலம் கல்வி முதல் சுகாதாரம் வரை அனைத்து சேவைகளையும் எளிதாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்வதை நாம் சாத்தியமாக்குவோம்.

பொது நிறுவனங்கள் மற்றும் வளங்களை விற்பனை செய்வதை தவிர்த்து, தொழில்முனைவோர் நிர்வாக சபைகள் மூலம் அவற்றை மறுசீரமைப்பதோடு, உள்ளூரில் தனியார் மற்றும் பொது கூட்டாண்மைகளை உருவாக்குவோம்.

மோசடி மற்றும் ஊழல் அரசியலை முழுக்கமாகக் கொள்ளாது, தகவல் தொடர்பு தொழில்நுட்பம் வாயிலாக மேற்கொள்ளும் கொள்முதல், திறந்த மற்றும் போட்டி முறையிலான ஏலம், நவீன வரி விதிப்பு முறை மற்றும் வெளிப்படையான முதலீட்டு பொறிமுறையை ஸ்தாபிப்பதில் முழுக் கவனம் செலுத்துவோம்.

இலங்கை வரலாற்றில் பெறப்பட்ட அனைத்து கடன்களையும் அவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பௌதீக மற்றும் மனித வளர்ச்சி சம்பந்தமான அனைத்து வித நடவடிக்கைகளையும் தடயவியல் தணிக்கை செய்து அந்த அறிக்கையை மக்களின் கைகளுக்குக் கிடைக்கச் செய்வோம்.

அரசாங்கத்தின் அனைத்து சொத்துக்களையும், கடன்களையும் முழு வெளிப்படைத் தன்மையுடன் பொதுமக்களையும் இணைத்துக்கொண்டு அரசாங்கத்தின் இருப்புநிலை ஆவணத்தைத் தயாரிப்போம்.

அரச சேவையின் தரம் மற்றும் செயல்திறனை மேம்படுத்தும் முகமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயல்திறன் முகாமைத்துவ அமைப்பை உருவாக்குவோம்.

மோசடி, ஊழல் மற்றும் விரயத்தை குறைக்கும் முகமாக மருந்துப் பொருட்களின் உற்பத்தி, கொள்முதல் மற்றும் விநியோகத்தை சீரான பாதையில் இட்டுச் செல்வோம்.

காலநிலையில் என்ன விதமான மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், ஒவ்வொரு வீட்டிற்கும் சுத்தமான குடிநீரை வழங்குவோம்.

அனைத்து கல்விப் பாடத்திட்டங்களும் முழுமையாக மதிப்பாய்வு செய்யப்பட்டு நவீன மற்றும் எதிர்கால உலகின் தொழில்வாய்ப்பு நிலவரம் மற்றும் சமூக தேவைகளுக்கு ஏற்றவாறு திருத்தங்களை மேற்கொள்வோம்.

அனைத்து கல்விப் பாடத்திட்டங்களும் சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைவாக நவீன மற்றும் எதிர்கால உலகின் தொழில்வாய்ப்பு நிலவரம் மற்றும் சமூக தேவைகளுக்கு ஏற்றவாறு திருத்தங்களை மேற்கொள்வோம்.

## 2

## விவசாயத் துறையில் அறிமுகப்படுத்தப்படும் மாற்றங்கள்

விவசாயம் மற்றும் கால்நடைத் துறையின் வாயிலாகக் கிடைக்கும் தேசிய உற்பத்தியை 18 பில்லியன் டொலர்களாக உயர்த்துவோம்.

விளைநிலப் பயிர்ச்செய்கை, சேனைப்பயிர்செய்கை போன்றவற்றுக்குத் தேவையான நீர்ப்பாய்ச்சுதல் வசதிகள், விதைகள், விதைநெல், உர வகைகள், அத்தோடு விளைச்சலின் போதும், அறுவடைகளை மேற்கொள்ளும் போதும் நவீன தொழில்நுட்ப உதவியுடன் கூடிய அறிவுரைகளை வழங்குவோம்.

அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகளை வழங்கல் மற்றும் பயிர்களை விற்பனை செய்வதிலிருந்து முழு செயல்முறையையும் நிர்வகிக்க புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய உழவர் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகாரம் அளிப்போம்.

பயிர்கள் நாசமடைவதைத் தடுக்கவும், ஏற்றுமதிக்கான கேள்வியை அதிகரிக்கவும் அதிகப்படியாகக் கிடைக்கும் அறுவடைகளைப் பாதுகாக்கும் பொருட்டு உலர் மற்றும் குளிரூட்டப்பட்ட களஞ்சிய சாலைகளை நிர்மாணிப்போம்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் நிலவும் சம்பள பிரச்சினைக்கு அனைத்து தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் நிரந்தர தீர்வு ஒன்றை வழங்குவோம்.

## 3

## உற்பத்தித் துறையின் மதிப்பை உயர்த்துதல்

நாட்டின் உற்பத்தித் துறையை ஆண்டுக்கு 45 பில்லியன் டொலர்களாக உயர்த்துவோம்.

கொழும்பு துறைமுக நகரம் மற்றும் ஸ்தம்பிதமடைந்த நெடுஞ்சாலைகளின் நிர்மாணப் பணிகளை உடனடியாக மீண்டும் ஆரம்பிப்போம் அத்தோடு, மந்தகதியில் இருக்கும் கட்டுமானத் துறையை உடனடியாக மீளச் செயல்படுத்துவோம்.

வீடுகள், மனைகள், அலுவலகங்கள் மற்றும் வணிக வளாகங்களை நிர்மாணிப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் பெறப்படும் கடன் மீதான வட்டியைக் குறைப்போம்.

முறைசாரா உணவு மற்றும் பானம் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் துறைசார் நிறுவனங்களை முறையான பொருளாதாரத்திற்குள் கொண்டு வரும் முகமாக, வங்கி வசதி மற்றும் நிதி வசதிகளை நாங்கள் ஏற்படுத்தித் தருவோம்.

உணவு மற்றும் பானம் தயாரிப்பதில் ஈடுபட்டிருப்போர் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள, தேவையான ஆராய்ச்சி வசதிகள் மற்றும் தர உத்தரவாத முறைகளை நெறிப்படுத்துவோம்.

தைத்த ஆடைத் துறையில் நிலவும் அதிகப்படியான செலவுகளைக் குறைப்பதற்கான வசதிகளை வழங்குவதன் மூலம் ஊழியர்களின் பணியின் தரத்தை மேம்படுத்தப் பாடுபடுவோம்.

## 4

## சேவைகள் வழங்கும் துறையில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்துதல்

விற்பனை மூலம் பெறப்படும் மொத்த பரிவர்த்தனைகளில் 90% த்தை வங்கிப் பரிமாற்ற முறைக்குள் கொண்டு வருவதன் மூலம், நாணயங்கள் மற்றும் தாள்களின் பயன்பாட்டைக் குறைத்தல்.

சில்லறை விற்பனைக் கடைத் தொகுதிகள் மற்றும் அவற்றின் விநியோகச் சங்கிலிகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் வருவாயை அதிகரிக்க பயிற்சி மற்றும் முதலீடுகளை வழங்குவோம்.

மின்னணு வர்த்தக முறைமையை (e-Commerce) ஊக்குவிப்பதற்காகவும், நுகர்வோர் நம்பிக்கையை வலுப்படுத்தத் தேவையான அரசாங்க விதிமுறைகளை வழங்குவதன் மூலமும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு எளிமையான வரிவிதிப்பு முறையை அறிமுகப்படுத்துவோம்.

பழைய பேருந்துகளை படிப்படியாக சேவையிலிருந்து அகற்றி புதிய உரிமங்கள் மற்றும் கடன் வசதிகளை வழங்குவதோடு சர்வதேச தரத்திலான நவீன மற்றும் வசதிகள் கொண்ட பேருந்துகளை மட்டுமே சேவையில் ஈடுபடுத்துவோம்.

நெடுஞ்சாலைகளுக்கு இணையாக தொடருந்துப் பாதைகளை அமைக்க நடவடிக்கை எடுப்போம்.

## 1

### அபிவிருத்தியோடு தொடர்புபட்ட நான்கு துறைகளில் புதிய வழிமுறைகளை அறிமுகம் செய்தல்

உள்ளூர் தொழில் முனைவோர்களின் மேம்பாட்டிற்கு மூலதனத்தை வழங்குவதற்காக வர்த்தக வங்கிகளுக்கு மேலதிகமாக நிறுவன அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கூட்டுறவு வங்கிகள் ஊடாக 10 பில்லியன் ரூபாவை முதலீடு செய்வோம்.

சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை நவீன முறைகளைக் கையாண்டு தீர்வுகளை வழங்கும் சமூக தொழில் முனைவோர்களுக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் செலவீனங்களைக் குறைக்கும் முகமாக, ஒரு பில்லியன் ரூபா சமூக முதலீட்டு நிதியத்தை (Impact Investing Fund) அறிமுகப்படுத்தவுள்ளோம்.

அந்நிய முதலீட்டை அதிகரிப்பதில் நிலவும் தடைகளை நீக்குவோம்.

## 2

### வலுவான மனித வள அபிவிருத்தி

மக்கள் தொகை வளர்ச்சியை சரியாக நிர்வகிக்கும் அதேவேளை, நீண்ட காலத்திற்கு மக்களை ஆரோக்கியமாக வைத்திருக்க ஊட்டச்சத்து மற்றும் சுகாதார வசதிகளில் முதலீடு செய்வதில் முனைப்புடன் செயலாற்றுவோம்.

அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு துறைசார் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளை, ஊக்குவிப்புகளை வழங்குவதன் மூலம் தொழில்சார் கௌரவத்தைப் பாதுகாப்போம்.

## 3

### தயாரிப்புகளுக்கான ஆராய்ச்சி

இலக்குகளைக் கொண்ட சந்தை அமைப்புகளை விருத்தி செய்யவும், சாத்தியமான புதிய தயாரிப்புகளை உருவாக்கவும், ஏற்கனவே உள்ள தயாரிப்புகளை உயர் தரத்திற்கு மேம்படுத்தவும் ஆராய்ச்சியில் முதலீடு செய்ய உறுதிபூண்டுள்ளோம்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு மேலதிகமாக, தனியார் துறை ஆராய்ச்சி நிறுவனங்களை ஒருங்கிணைத்து செழிப்பான ஆராய்ச்சிகளை முன்னெடுத்துச் செல்லும் கலாச்சாரத்தை உருவாக்குவோம்.

## 4

### உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முதலீடுகளை மேற்கொள்ளல்

சர்வதேச தரத்திற்கு அமைவாக சுகாதார வசதிகளுடன் கூடிய போக்குவரத்து அமைப்பை செயல்படுத்தப் பாடுபடுவோம்.

ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் பாதுகாப்பான வீட்டை வழங்குவதன் மூலம் மேற்கண்ட பொருளாதார இலக்குகளுடன் இணைக்கப்பட்ட 12 புதிய குடியிருப்பு நகரங்களை உருவாக்குவோம்.

எதிர்காலத்தில், அனைத்து அரச கட்டிடங்களும் காலநிலை மாறுதலுக்கேற்றவாறு ஈடுகொடுக்கும் வகையில் நவீன தொழில் நுட்பங்களுக்கு ஏற்ப, குறைந்தபட்ச பராமரிப்பு செலவில், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் நிர்மாணிக்கப்படும்.

# சுதந்திரம்

## 1

### பொருளாதார சுதந்திரத்தை விரிவுபடுத்துதல்

எந்தவொரு குடிமகனும் தான் விரும்பியபடி வாழவும், தொழில் செய்யவும், பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யவும் மற்றும் நுகர்வை மேற்கொள்ளவும் அவர்களின் செல்வத்தை முதலீடு செய்வதற்கு ஏதுவாகவும் பொருளாதார சுதந்திரத்தை விரிவுபடுத்துவோம்.

சர்வதேச தரத்திற்கு ஏற்ப தனிநபர்களின் பௌதீக சொத்துகள் மற்றும் அறிவுசார் சொத்துகளுக்கான அரச மற்றும் சட்ட வரைமுறைக்குட்பட்ட பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

அரசாங்கத்தின் பொருளாதார செயல்முறையை கட்டுப்படுத்துவதில் இருந்து முடிந்தவரை அரசாங்கம் விலகி இருக்கும் அதேவேளை, தேசிய நலன், தனிநபர் மற்றும் வர்த்தக சுதந்திரத்தை பாதுகாக்கத் தேவையான ஒழுங்குமுறைகளை வலுப்படுத்துவோம்.

## 2

### அரசியல் சுதந்திரம்

நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சம இறையாண்மை உள்ளது. அதை விட்டுக்கொடுக்க முடியாது. அதன்படி, நாட்டின் விவகாரங்கள் எவ்வாறு இருத்தல் வேண்டும் அல்லது அரசியல் ரீதியாக என்ன விதமான மாற்றங்கள் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒவ்வொரு குடிமகனும் தத்தம் சொந்த கருத்தைக் கொண்டிருப்பதற்கும், அந்தக் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும், தனக்கு விருப்பமான அரசியல் கட்சியில் இணைந்துகொள்வதற்கும், அந்தக் கருத்துக்களுக்கு ஏற்ப செயல்படுவதற்கும் இருக்கக்கூடிய சம உரிமையை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

ஒவ்வொரு குடிமகனின் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அதேவேளை, அதன் மூலம் மற்றைய குடிமகனின் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் அல்லது வேறு எந்த சுதந்திரமும் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவோம்.

நாட்டின் ஜனநாயக அமைப்புகள் மற்றும் கட்டமைப்புகளை உள்ளடக்கிய அரசியலமைப்பை வலுப்படுத்தி, மக்களின் அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாப்போம்.

## 3

### கலாச்சார சுதந்திரம்

சிங்கள, தமிழ், முஸ்லிம், மலாயர், பறங்கியர், ஆதிவாசி, மற்றும் வேடுவ சமூகத்தினர் உள்ளிட்ட எந்தவொரு தேசத்தின் குடிமகனும் தத்தம் கலாச்சார அடையாளங்களைப் பிரதிபலிக்கவும் அவர்களுக்கு இருக்கக்கூடிய சம உரிமையை உறுதிப்படுத்துவோம்.

பல்வேறுபட்ட கலாச்சாரங்களுக்கிடையில் தொடர்புகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் அவ்வந்த கலாச்சாரத்தைப் பின்பற்றும் சமூகங்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வை உருவாக்க நாம் முனைப்புடன் பாடுபடுவோம்.

நாட்டின் கலாச்சாரத்தையும் அதன் பரிமாணங்களையும் உலகிற்கு வெளிப்படுத்த கலை மற்றும் செயல்திறன் வாய்ப்புகளை உருவாக்குவோம்.

## 4

### மத மற்றும் மத வழிபாட்டுச் சுதந்திரம்

பௌத்த, இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ, இஸ்லாமிய அல்லது பிற மத வழிபாட்டு முறை அல்லது நம்பிக்கை போன்றவற்றை தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ நடத்துவதற்கும், தனக்கு இஷ்டமான மதத்தைத் தழுவிக்கொள்வதற்கும், அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கும், நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்கக்கூடிய சுதந்திரத்தை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

ஒவ்வொரு குடிமகனுக்கும் பல்வேறு மத போதனைகள் மற்றும் மதம் சம்பந்தமான அடிப்படைக் கல்வியை வழங்குவதன் வாயிலாக, அமைதியான மற்றும் கௌரவமான தொடர்பாடல் மூலம் ஒவ்வொரு குடிமகனும் பல்வேறு மத நம்பிக்கைகள் மற்றும் தத்துவங்களைப் பற்றிய பரந்த புரிதலைப் பெறக்கூடிய சுதந்திரமான சூழலை உருவாக்குவோம்.

## இறுதியாக ஆனால், உறுதியாக....

மேலே நீங்கள் கண்ட எமது கொள்கை விளக்கப் பிரகடனத்தினூடாக நாம் உங்கள் முன் வைக்கும் இந்தப் பிரதிக்கினை, நாட்டின் வளர்ச்சி இலக்குகள் மற்றும் அவற்றை அடைவதற்கான அடிப்படை மற்றும் நவீனத்துவமான வழிமுறைகள், வியூகங்கள் மற்றும் குறிக்கோள்கள் பற்றிய சுருக்கமான விளக்கத்தை உங்கள் முன் வைக்கிறது. இது உங்கள் மனதில் ஒரு தெளிவான புரிதலை ஏற்படுத்தியிருக்கும் என்று நம்புகிறோம். எமது தாய் மண்ணில் இவற்றை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமானால், நாம் அனைவரும் நம் நாட்டின் எதிர்கால நலனுக்காகவும், வளர்ச்சிக்காகவும், அபிவிருத்தி இலக்குகளை அடையவும் ஒன்றிணைந்து அயராது பாடுபடவேண்டும்.

இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் ஒவ்வொரு இலக்கை அடைவதற்கும் மற்றும் மூலோபாயங்களை வகுத்துக்கொள்வதற்கும் மேலே குறிப்பிட்ட திட்டங்களை மிக்க உறுதியுடன் செயல்படுத்த வேண்டும். இவை அமைச்சுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் மட்டத்தில் இருந்து முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். இந்தத் திட்டங்களில் உங்கள் மேலான செயன்முறைப் பங்களிப்பை நாம் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.

இனிமேல் எக்காரணத்தைக் கொண்டும், எமது நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதற்கு இடமளியாதிருப்போம். அதேபோல, எந்த ஒரு சூழ்நிலையிலும் மீண்டும் ஒருமுறை எம் நாடு பொருளாதார நெருக்கடிகளுக்குள் விழுந்துவிடால் இருக்கவும், நாட்டு மக்கள் மீண்டும் சீரழிவுகளை சந்திக்காமல் நிம்மதியுடன் வாழவும் நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம். உங்களுக்காக ஒரு சிறந்த, வளமான நாட்டை உருவாக்க நானும், எனது கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் உறுதியான இலட்சியத்தைக் கொண்டுள்ளோம். அந்த அர்பணிப்புடனான பயணத்தில் இணைந்துகொள்ள, என் மீது நம்பிக்கை வைத்து, உங்கள் பெறுமதிமிக்க வாக்குகளை எனக்குப் பெற்றுத் தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

නාමල් රාජපක්ෂ
நாமல் ராஜபக்ச
**Namal Rajapaksa**

X



# இது
## உங்களுக்காக

உங்கள் நலனில் அக்கறைகொண்ட
ஒருங்கிணைந்த, வளர்ச்சியை நோக்கிய தசாப்தம்

Visit the website for an interactive digital experience of this document.

namal2024.com

Download on the App Store

GET IT ON Google Play